**குருவிட்ட பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குருவிட்ட பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும்எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் குருவிட்ட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ்வாண்டின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் 1.2 (அ) (ஆ) பந்தி தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீடுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பு வருமானம் ரூபா 459,387 கூடுதலாக கணக்கீடு செய்திருந்தமை மற்றும் மீள்நிரப்பிய சம்பள வருமானம் ரூபா 665,698 கூடுதலாக சம்பள மீள்நிரப்பு கணக்கிற்கு பிரதியிட்டிருந்ததால் அக்கணக்கின் மீதி ரூபா 206,311 குறைந்ததாக மற்றும் ஆண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா 459,387 கூடுதலாக காட்டப்பட்டன. | 2021 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் பெறப்பட வேண்டியவைகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் பணமாக கிடைத்த வீதவரி வருமானம் ரூபா 2,880,851 ஆன போதும், அது ரூபா 3,369,959 ஆக வீதவரி குத்தகை கணக்கிற்கு பிரதியிட்டிருந்ததால் கிடைக்க வேண்டிய வீதவரி மீதி ரூபா 489,108 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடந்த ஆண்டினுள் கணக்கீடு செய்யப்படாத வருமான கடன்படுனர் மீளாய்வாண்டினுள் இரட்டை கணக்குப் பதிவிட்டுள்ளமையால் ஆண்டிறுதியில் வருமான கடன்படுனர் மற்றும் திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 16,910,533 கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கணக்குகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் மாகாண சபை ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட வேலைகளிற்காக கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 37,402,090 ஆன மூலதன வருமானம் மற்றும் மூலதன செலவுகள் கணக்கீடு செய்யப்படவில்லை. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | மாகாண சபையிலிருந்து கிடைக்க வேண்டிய மூலதன உதவியை கணக்கீடு செய்திருக்கையில் ஆண்டிற்கான பில்லிடலாக ரூபா 57,724,871 மீண்டும் கணக்கீடு செய்துள்ளதால் கிடைக்க வேண்டிய மூலதன வருமானம் அப் பெறுமானத்தால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | நிலையான வைப்பு மற்றும் அதற்குரிய வட்டியை கணக்கீடு செய்கையில் ஏற்பட்டிருந்த தவறு காரணமாக திரண்டு நிதியத்தின் மீதி ரூபா 45,727,680 கூடுதலாக காட்டப்பட்டதுடன் ஆண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா 3,674,834 இனால் மற்றும் நடைமுறை சொத்து ரூபா 7,349,668 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆண்டு கணக்குகள் தயாரிக்கையில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கணக்குகளை சரிசெய்ய வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்திருந்த ரூபா 32,247,187 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிள் கொள்வனவு செய்த நிலையான சொத்துக்களை மூலதனமாக்க வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்குரிய செயற்பாட்டு செலவு ரூபா 213,234 இனாலும், மூலதன செலவு ரூபா 681,079 இனாலும் நடைமுறை பொறுப்பு ரூபா 894,313 இனாலும் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய செலவு மற்றும் செலுத்த வேண்டியவை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஐ) | கடந்த ஆண்டு செயற்படுத்திய வேலைகளிற்காக கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியிருந்த கூட்டுத் தொகை ரூபா 1,985,463 கணக்கீடு செய்யப்படாததால் மீளாய்வாண்டு இறுதியில் கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆண்டு இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கடந்த ஆண்டுடன் தொடர்பான கணக்கீடு பிழைகளை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் 05 கணக்கு விடயங்களிற்குரிய மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான துணை பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்படும் மீதிகளிற்கிடையில் ரூபா 136,379,964 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ஆரம்ப மீதி வித்தியாசம் ஒன்று நிலவுவதால் அதனை சரிசெய்ய ஆலோசனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக் கூற்றுக்கள் மற்றும் துணை பதிவேடுகள் இணங்க செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| கூட்டுத்தொகை ரூபா 8,931,176 ஆன 05 கணக்கு விடயங்களிற்கு உரிய கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படவில்லை. | இக் கணக்குகளின் மீதி நீண்ட காலமாக நிலவி வருவதுடன் விபரங்களை கண்டறிய எவ்வித ஆவணமும் இல்லாததால் திணைக்கள முகாமை மற்றும் கணக்காய்வு குழுவிற்கு சமர்பித்து தீர்மானமொடுக்க எதிர்பார்ப்பதாக. | நிதிக்கூற்றக்களில் காட்டப்படும் மீதிகளை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் முன்வைக்க வேண்டியதுடன், நீண்ட காலமாக முன்கொண்டு வரப்படும் இம் மீதிகளை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 94,509,380 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 8,751,962 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 12,668,083 ஆன நிலுவை வீதவரி மீதி ஒன்று நிலவியது. | பட்டியல் தயாரித்து குழுக்கள் பிரித்து நிலுவை சேகரிக்கும் வேலைத் திட்டம் செயற்பட்ட போதும், கொரோனா தொற்று நிலையின் இரண்டாம் அலை காரணமாக அவ் வேலைத் திட்டத்தை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளதாக. | நிலுவை வீதவரி அறவிட பிரதேச சபை சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 515,889 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த காணி தொடர்பான விபரங்களை அங்கத்தவரிகளிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான படிவங்களை வழங்கியதுடன், அதனூடாக பெறப்படும் தகவல்களின் பிரகாரம் முன் நடவடிககை எடுக்க எதிர்பார்ப்பதாக. | ஏக்கர் வரி ஒப்பாய்வொன்றை மேற்கொண்டு நிலுவை வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம் | | |
| | மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து அறவிட வேண்டியதாக இனங்கண்டிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,928,555 ஆனதுடன், முத்திரை கட்டணம் ரூபா 9,704,283 ஆனது. 2020 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் முத்திரைக் கட்டணத்தை இனங்காண நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இனங்கண்டுள்ள நீதிமன்ற தண்டப்பணத்தை மற்றும் முத்திரை கட்டணத்தை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து கோரியுள்ள போதும் இது வரை கிடைக்கவில்லை எனவும் மற்றும் இனங்காணாத முத்திரை கட்டண வருமானத்தை இனங்காண நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை உரிய காலத்தில் இனங்கண்டு அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பொஹொரபாவ கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக நீரை பெற்றுக் கொள்ள மாற்று வழி இருக்கையில் குழாய் கிணரொன்றை அமைக்க பூகோல விஞ்ஞான கணிப்பீடொன்றை மேற்கொள்ள ரூபா 45,900 செலவிடப்பட்டிருந்தது.<br>கணிப்பீட்டறிக்கை கிடைத்த பின்னர் அதற்காக சபை அங்கீகாரம் கிடைக்காததால் செலவிட்ட ரூபா 45,900 விளைவற்ற செலவொன்றானது. | பரிசோதனை அறிக்கை பிரகாரம் இவ்விடத்தில் குழாய் கிணரொன்றை அமைப்பது சாத்தியமற்றதாக காணப்படுவதால் மற்றும் 60 மீட்டர் ஆழத்திற்கு இக் குழாய் கிணரை அமைக்க வேண்டியதால் அதற்காக சபையின் அங்கீகாரம் கிடைக்காததால் குழாய் கிணறை அமைக்கும் நடவடிக்கையை செயற்படுத்தவில்லை என. | செலவு மேற்கொள்ள முன்னரான நிலைமை மற்றும் அதனை பூர்த்தி செய்து கொள்ள முடியுமான மாற்றுவழி பற்றி முறையான ஆய்வொன்றை மேற்கொள்ள கவனம் செலுத்த வேண்டும். |